[2008 நவம்பர் 11

10—

பால் பண்ணை

***33252—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோவில் தொகுதி, வானமாதேவியில் பால் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காட்டுமன்னார்கோவில் தொகுதி, வானமாதேவியில் பால் பண்ணை அமைக்க அரசிடம் செயல் திட்டம் ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 18–வது கால்நடைக் கணக்கெடுப்பை எடுப்பதற்கு நம்முடைய அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, வெண்மைப் புரட்சியின் பலன்களை நல்ல முறையிலே பயன்படுத்திக்கொண்டிருக்கிற மாநிலங்களில் ஒன்றாக இருக்கிற நம்முடைய தமிழகத்தில், கடலூர் மாவட்டத்தில் கால்நடைகள் அதிக எண்ணிக்கையிலே இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, அங்கிருக்கின்ற மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்கள் கால்நடை வளர்ப்பைத் தங்களுடைய முக்கியமான வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கின்றார்கள்.

முற்பகல் 10—45

மேலும், அங்கே நாளொன்றுக்கு 1.30 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனாலும்கூட, அந்த மாவட்டத்திலே பால் பண்ணை என்று எதுவும் கிடையாது. பால் குளிரூட்டும் நிலையம் என்று ஒன்றே ஒன்றுதான் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையிலே

2008 நவம்பர் 11]

அங்கே ஒரு பால் பண்ணையை அமைத்தால், அங்குள்ள பால் உற்பத்தியாளர்கள் மட்டுமல்லாமல், கால்நடைகளை நம்பி வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், குறிப்பாக, மகளிருக்கும் மிகுந்த உதவியாக இருக்கும். எனவே, அங்கே ஒரு பால் பண்ணையை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு பால் பண்ணை அமைப்பதற்குக் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் லிட்டர் பால் உபரியாக இருக்கவேண்டும். அதோடுமட்டுமல்லாமல், ஒரு பால் பண்ணையை அமைப்பதற்கு 35 கோடி ரூபாய் வரை செலவாகின்றது. அதற்கான இடம் 25 ஏக்கர் தேவைப்படுகின்றது. அதற்குப் பதிலாகத்தான், 5 ஆயிரம் லிட்டர், 10 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் ஆகக்கூடிய இடங்களில் பால் குளிர்விப்பான் நிலையம் அமைக்கப்படுகின்றது. அந்த அடிப்படையில்தான் காட்டுமன்னார்கோவில் பகுதியில் வானமாதேவி கிராமத்தை ஒட்டியுள்ள ஆறு சங்கங்களின் வாயிலாக 1,140 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகின்றது. 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சேத்தியாத்தோப்பு குளிர்விப்பான் நிலையத்தில் குளிர்விக்கப்படுகின்றது. அதோடுமட்டுமல்லாமல், வானமாதேவி கிராமத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பெரியபட்டு, 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அம்மாப்பேட்டை மற்றும் 55 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஆவினன்குடி ஆகிய கிராமங்களில், தலா 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள பால் குளிர்விப்பான் நிலையத்திற்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்று இன்னும் ஒரு மாத காலத்தில் அவை நிறுவப்படவிருக்கின்றன. அதன் மூலம் இந்தக் குறைகள் எல்லாம் சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய பகுதியில் பால் உற்பத்தி இன்றைக்கு 100 லிட்டர்தான் இருக்கின்றது. மேன்மேலும் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மகளிர் மூலமாக அங்கே சங்கங்கள் அமைக்கப்பட்டு, பால் உற்பத்தி பெருகி, அப்பகுதியில் இன்னும் 2 ஆயிரம், 3 ஆயிரம் லிட்டர் வருமேயானால், அங்கே பால்

குளிர்விப்பான் நிலையம் ஒன்று புதிதாக அமைக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்த தகவலுக்கு நன்றி. வானமாதேவி கிராமத்திலே அந்த அளவுக்குப் பால் உற்பத்தி இல்லையென்றாலுங்கூட, சுற்றுப்புறக் கிராமங்களில் மிகுந்த அளவிலே பால் உற்பத்தி ஆகிக்கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியிலே நூற்றுக்கணக்கான பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. வானமாதேவி—கும்பகோணம் பாதை நல்ல போக்குவரத்தைக் கொண்டிருக்கின்ற காரணத்தாலே, அந்தக் கிராமத்திலே பால் பண்ணை அமைத்தால், அப்பகுதி மக்களுக்கும், அதைச் சுற்றியுள்ள கிராமப் பகுதி மக்களுக்கும் அது பயனுள்ளதாக இருக்கும். பால் பண்ணை அமைக்க முடியவில்லையென்றாலுங்கூட, ஒரு பால் குளிர்விப்பான் நிலையத்தையாவது அங்கே அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானமாதேவி கிராமத்தைச் சுற்றியுள்ள சங்கங்களிலிருந்து பெறக்கூடிய பாலின் அளவு, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல 1,140 லிட்டர்தான் இருக்கின்றது. 2,000 அல்லது 2,500 லிட்டர் அளவுக்கு அது வருகின்ற நேரத்தில், கூடிய விரைவில் பால் உற்பத்தியை அதிகப்படுத்தி, நிச்சயமாக ஒரு பால் குளிர்விப்பான் நிலையம் அந்தப் பகுதியில் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.